**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.172/2017**

**வழக்கு சாட்சி.அ.சா.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிஷோர்குமார் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | நல்லசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு-317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **07.06.2023**

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோட்டில் குடியிருந்து கொண்டு, பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன்.

நான் 2003-ம் வருடம் நேருவிவேகானந்தனிடம் இடம் வாங்க பத்திரம் போடப்பட்டது. அந்த பத்திரத்தில் சொத்தை 4,50,000/- ரூபாய்க்கு விலை பேசி 4,00,000/- அட்வான்ஸ் கொடுத்தேன். எனது வங்கி கடனை அடைப்பதாக கூறியதால் தான் அட்வான்ஸ் பணம் கொடுத்தேன். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அவர் வங்கியில் பணிபுரிந்து வந்ததால், பொது அதிகாரத்தை ரவி என்பவருக்கு வழங்கியிருந்தார். பத்திரக்காலம் முடிந்தவுடன், பொது அதிகாரம் வழங்கிய ரவி மூலம் கெடுவை நீடித்துக்

கொடுத்தார். பிறகு 2008-ம் வருடம் கெடு நீடிப்பிற்காக ஒரு 10 ஆயிரமும், மேலும் 40 ஆயிரமும் கொடுத்து, அவர் பொது அதிகாரத்தின் மூலம் ரவியின் வாயிலாக நேருவிவேகானந்தன் சொத்தை நான் கிரையம் பெற்றுக் கொண்டேன். எனது கடனை அவர் அடைப்பதாக கூறிய வாக்குறுதியை நிறைவேற்றாததால், நான் அவரிடம் கேட்டபோது, என்னிடம் பணம் கேட்டார். நான் மறுத்து விட்டேன். மறுத்து விட்டதால், ஈரோடு தெற்கு காவல் நிலையத்தில் இந்த வழக்கின் சாட்சிகளை எதிரிகளாக பாவித்து, பொய்புகார் அளித்தார். அதை விசாரித்து, அது பொய் என்று வழக்கு முடித்து வைக்கப் பட்டது.

மாவட்ட குற்றப்பிரிவில் மறுபடியும் ஒரு புகார் கொடுத்தார். அது சிவில் வழக்கு என்று முடிவு செய்யப்பட்டது. விலிக்கன் கமிட்டியில் ஒரு புகார் அளித்தார். அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பின்னிட்டு நான் உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்து, எனது வழக்கு சொத்திற்குள் யாரும் நுழையக் கூடாது என்று எனக்கு ஆதரவாக ஒரு உறுத்துக் கட்டளை ஆணையைப் பெற்றேன். இவ்வாறு தொடர்ந்து புகார் அளித்துக் கொண்டே இருந்ததால், செல்வராஜ் தெற்கு காவல் நிலையத்தில், நேருவிவேகானந்தன் பேரில் ஒரு புகார் அளித்தார். அதில் நாங்கள் நடந்தவற்றை கூறினோம். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

சாட்சிய விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.172/2017**

**வழக்கு சாட்சி.அ.சா.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிச்சாமி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சென்னியப்ப கவுண்டர் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு-317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **07.06.2023**

முதல் விசாரணை

நான் தற்போது கொல்லம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, சுயதொழில் செய்து வருகிறேன்.

கடந்த 2017-ம் வருடம் பயர் சர்வீஸ் அருகே உள்ள எனது தோழர் சுப்பிரமணியன் அவர்கள் வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது, உதவி ஆய்வாளர் வந்து என்னிடம் ஒரு வீட்டை அடையாளம் காட்டி, மேப் போட வேண்டும் என்று என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார். நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நீங்கள் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால், சரியல்ல, படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்றால், செல்வராஜ் புகார் அளித்ததாகவும், அது தொடர்பாக புகார் அளித்ததாகவும் எழுதி இருந்தது. அ.சா.1 முதல் அ.சா.6 வரை உள்ள சாட்சிகளை உங்களுக்கு தெரியுமா இல்லை என்றால், இல்லை. நீங்கள் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தீர்கள் என்றால், இல்லை, சுப்பிரமணியன் வீட்டிற்கு வெளியே ரோட்டில் வைத்து கையொப்பம் செய்தேன். நீங்கள் முதல் விசாரணையில் கூறியுள்ள வாசகங்கள் அனைத்தும் பொய் என்றாலும், அ.சா.1 உங்கள் நண்பர் என்பதாலும், போலீசார் கேட்டுக்கொண்டதாலும், நீங்கள் பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால், சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.